தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 14 மடல் 6 ஜூன் – 2014 ₹1.00

## மத்திய உணவுப் பதப்படுத்தல் தொழில்கள் அமைச்சகத்தின் அதிகாரிகள் வருகை



மத்திய உணவுப் பதப்படுத்தல் தொழில்கள் அமைச்சகத்தின் கூடுதல் செயலர் திரு. எஸ்பி. மீனா, இ.ஆ.ப., இணைச் செயலர் திருமதி அனுராதா பிரசாத் இ.ஆ.ப., தமிழக அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர் திரு. சந்தீப் சக்சேனா இ.ஆ.ப., தேசிய உணவுப் பதப்படுத்தல் திட்ட இயக்குநர் திரு. எஸ். சுரேஷ் குமார் இ.ஆ.ப., இந்திய உணவுப் பயிர் பதப்படுத்தல் தொழில்நுட்ப நிலையத்தின் இயக்குநர் டாக்டர் கே. அழகுசுந்தரம் ஆகியோர் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் இறைச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைக்கு 14.05.2014அன்று வருகை புரிந்து, இறைச்சி மற்றும் இறைச்சிப் பொருட்கள் தர ஆய்வகம் நிறுவுவதற்கான இடத்தை பார்வையிட்டனர்.

## மாடுகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்கள்– கருத்தரங்கம்




பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மையத்தின் மனித மற்றும் விலங்கினத்திற்கிடையே பரவும் நோய்கள் ஆராய்ச்சிக் கூடம்மூலம் "மாடுகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்கள்" பற்றிய கருத்தரங்கம், தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் நிதியுதவியுடன் 20.05.2014அன்று நடத்தப்பட்டது. இதில் 68 கால்நடை மருத்துவர்கள் பங்கேற்று நுண்ணுயிர், நச்சுயிர், பூஞ்சை, ஒட்டுண்ணி மற்றும் உணவுப் பொருட்களால் மாடுகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்கள் பற்றிய ஒன்பது விரிவுரைகள் மூலம் பயன்பெற்றனர். பல்கலைக்கழகக் கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் (பொ.) முனைவர் கா. குமணன் அவர்கள் கருத்தரங்கில் பங்கேற்றவர்களை வரவேற்று மாடுகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்கள் – ஒரு கண்ணோட்டம் என்னும் தலைப்பில் விரிவுரை ஆற்றினார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமையேற்று, கால்நடைகளின் நலம் என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். தமிழக அரசின் பொதுச் சுகாதார இயக்குநர் மருத்துவர் க. குழந்தைசாமி அவர்கள் விரிவுரைகள் அடங்கிய குறுந்தகட்டினை வெளியிட்டு, தமிழகத்தில் மனித மற்றும் விலங்கினத்திற்கிடையே பரவும் நோய்கள் – இன்றைய நிலைப்பாடு என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். இறுதியில் முனைவர் கோ. ரவிக்குமார், பேராசிரியர் மற்றும் தலைவர் அவர்கள் நன்றியுரை நல்கினார்.

## கல்விநிலையப் பணி

### சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி

#### களப்பணிக் கால்நடை மருத்துவர்களுக்குப் பயிற்சி



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் உழவியல் துறைமூலம் தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் நிதியுதவியுடன் "பசுந்தீவன உற்பத்தித் தொழில்நுட்பங்களில் குறிப்பாகப் பண்ணை இயந்திரமயமாக்கல், நுண்ணீர்ப் பாசன முறை மற்றும் மேய்ச்சல் நில மேலாண்மை" குறித்த ஐந்து நாள் பயிற்சி, 12.05.2014முதல் 16.05.2014வரை நடைபெற்றது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி. ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்துச் சிறப்புரை ஆற்றினார். பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் சி. சந்திரகாசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். 16.05.2014அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் மாநிலத் திட்டக்குழு உறுப்பினர் செயலர் (பொ.) மற்றும் நிலப் பயன்பாட்டுப் பிரிவுத் தலைவர் டாக்டர் சுகட்டோ தத் ஐ.எப்.எஸ். அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி, நிறைவு உரை ஆற்றினார். பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு, தொலைநிலைக் கல்வி

இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். உழவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் வி. எம். சங்கரன் அவர்கள் நன்றியுரை வழங்கினார். பயிற்சி பெற உள்ள மொத்தம் 270 கால்நடை உதவி மருத்துவர்களில் முதல் தொகுதியைச் சார்ந்த 30 கால்நடை உதவி மருத்துவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

### தேசியப் பயிற்சி



“புரதக் கோர்வை மற்றும் மரபணுக்கோர்வைகளை உயிர்நுட்பத் தகவலியல் மென்பொருள்மூலம் பகுப்பாய்தல்” குறித்த பயிற்சியை, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் உயிர்நுட்பத் தகவல் மையம் 26.05.2014முதல் 28.05.2014வரை நடத்தியது. பயிற்சியில் கேரளா, மகாராஷ்டிரா, புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு மாநிலங்களைச் சேர்ந்த 14 அறிவியலாளர்கள் பங்கேற்றனர். 28.5.2014 அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கி, பயிற்சியில் பங்குபெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். உயிர்நுட்பத் தகவல் மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் பெ. குமாரசாமி அவர்கள் பயிற்சி அறிக்கை வாசித்தார்.

### இறைச்சி பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் குறித்த பயிற்சி

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் இறைச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைமூலம் “இறைச்சி பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல்” குறித்த மூன்று நாள் பயிற்சி, 06.05.2014முதல் 08.05.2014வரை நடத்தப்பட்டது. இறைச்சி பதப்படுத்தல் தொழிலில் ஈடுபட விரும்பும் நான்கு இறைச்சி விற்பனையாளர்களுக்கு இறைச்சி பதப்படுத்தல், இறைச்சியை விற்பனை செய்தல் மற்றும் நீண்ட நாட்களுக்கு இறைச்சியைப் பாதுகாத்து வைத்தலில் செயல்முறைப் பயிற்சி அளிக்கப்பட்டது.

## திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

### பயிலரங்கு

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாடு மற்றும் ஆராய்ச்சி ஆணையத் திட்டத்தின்கீழ் “விவசாய நிலங்களில் மண் மற்றும் கனிம வளத்தை அடையாளங்கண்டு உயிர் வளத்தை அதிகப்படுத்திக் கால்நடை உற்பத்தித்திறனை மேம்படுத்தல்” குறித்த ஒரு நாள் பயிலரங்கு, திருநெல்வேலி மாவட்டப் பண்ணையாளர்களுக்காக 20.05.2014அன்று நடத்தப்பட்டது. பயிலரங்கைக் கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் துவக்கிவைத்து, தலைமையுரை ஆற்றினார். பயிலரங்கில் திருநெல்வேலி, மண் ஆய்வு மற்றும் நிலப் பயன்பாட்டு அமைப்பின் வேளாண் அலுவலர் திரு. ஆர். நைனார் முகமது அவர்கள் வல்லுநராகப் பங்கேற்றார். கலந்துரையாடல் அமர்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 10 மகளிர் உட்பட 44 பண்ணையாளர்கள் பயிலரங்கில் பங்கேற்றனர்.

### கால்நடை மற்றும் கோழி வளர்ப்புப் பயிற்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பயிற்றுவிக்கும் கால்நடைப் பண்ணை வளாகத்தில் “கறவை மாடு, ஆடு மற்றும் கோழி வளர்ப்புமூலம் அதிக வருவாய் ஈட்டுவதற்கான வழிமுறைகள் ” குறித்த மாநில அளவிலான பயிற்சி, ஆத்மா திட்டத்தின் ரூபாய் 75, 000/– நிதியுதவியில் 05.05.2014முதல் 09.05.2014வரை நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, தனுவாஸ் தாதுஉப்புக் கலவை, கறவைமாடு வளர்ப்புப் புத்தகம் ஆகியவற்றைப் பயனாளிகளுக்கு வழங்கினார். மொத்தம் 20 பேர் பயன்பெற்றனர்.

### கறிக்கோழி வளர்ப்புப் பயிற்சி



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் விரிவாக்கக் கல்வித் துறை மற்றும் பயிற்றுவிக்கும் கால்நடைப் பண்ணை வளாகம்மூலம் “கறிக்கோழி வளர்ப்பு”குறித்த மூன்று நாள் பயிற்சி, தமிழ்நாடு அரசின் கோழி வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டப் பயனாளிகளுக்காகக் கல்லூரியின் இராமையன்பட்டி வளாகத்தில் இரு பிரிவாக 19.05.2014–21.05.2014, 22.05.2014–24.05.2014ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் பயிற்சியில் பங்கேற்றவர்களுக்குச் சான்றிதழ் மற்றும் பயிற்சிக் கையேடு வழங்கினார்.

## விரிவாக்கப் பணி

### செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் செம்மறியாடு வளர்ப்பு, வெள்ளாடு வளர்ப்பு, கறவைமாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, கோழி இனப்பெருக்கப் பண்ணை மேற்பார்வையாளர் குறித்த செயல்திறன் மேம்பாடு மற்றும் சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள், ஈரோடு மற்றும் பெரம்பலூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், மாதவரத்தில் உள்ள பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை மற்றும் கோழியின ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றில் மே 2014இல் நடத்தப்பட்டன. பயிற்சிகளில் 13 பேர் பதிவுசெய்து, பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்தனர்.

## பயிற்சி

- காஞ்சிபுரம், உழவர் பயிற்சி மையம்மூலம் “நாட்டுக்கோழி வளர்ப்பு” குறித்த மூன்று நாள் பயிற்சி, தமிழ்நாடு அரசின் கோழியின மேம்பாட்டுத் திட்டப் பயனாளிகளுக்காக 19.05.2014முதல் 21.05.2014வரை பொன்னேரியில் நடத்தப்பட்டது. மேலும், இம்மையம் காஞ்சிபுரம் மாவட்ட வேளாண்மைத் துறையுடன் இணைந்து 35 ஆத்மா திட்டப் பயனாளிகளுக்காக “நாட்டுக்கோழி வளர்ப்பு” பயிற்சியைப் பஞ்சுபேட்டையிலும், புதுவாழ்வுத் திட்டத்தின் 35 பயனாளிகளுக்காக “அறிவியல் முறையில் ஆடு வளர்ப்பு” குறித்த இரு நாள் பயிற்சியைத் திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்தில் 27.05.2014 மற்றும் 28.05.2014ஆம் தேதிகளிலும் நடத்தியது. திருவள்ளூர் மாவட்டம், செங்கரை கிராமத்தில் கோழிப் பண்ணையாளர்களுக்கு 100 எண்ணிக்கையிலான வாய்வழி அளிக்கும் வெள்ளைக்கழிச்சல் நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டன.
- பொட்டனேரி, மேச்சேரி செம்மறியாடு ஆராய்ச்சி நிலையம்மூலம் பல்கலைக்கழக வெள்ளி விழா ஆண்டையொட்டி “ஆடு வளர்ப்பு” குறித்த பயிற்சி நடத்தப்பட்டது. தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருந்து 104 பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## செயல் விளக்க நிகழ்ச்சி



பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டினை முன்னிட்டு, மண்டல ஆராய்ச்சி மையம், புதுக்கோட்டையில் 24.05.2014 அன்று ஆத்மா திட்டத்தின் கீழ் “புதுக்கோட்டை மாவட்டத்தில் நந்தனம் II – வான்கோழியைப் பிரபலப்படுத்துதல்”, “தனுவாஸ் தாதுஉப்புக் கலவையைப் பிரபலப்படுத்துதல்”, “பண்ணையாளர்களுக்குத் தீவனப்புல் விதைகளை வழங்குதல்” ஆகிய செயல் விளக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் தலைமை வகித்து, “வான்கோழி வளர்ப்பு” புத்தகத்தை வெளியிட்டு, நந்தனம் ரக வான்கோழிகள் மற்றும் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்கி, தலைமையுரை ஆற்றினார். பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் தனுவாஸ் தாதுஉப்புக் கலவையை விவசாயிகளுக்கு வழங்கி, கால்நடைகளுக்குத் தாதுஉப்புக் கலவை அளிப்பதன் முக்கியத்துவம் மற்றும் வான்கோழி வளர்ப்பு மூலம் இலாபம் பெறும் முறைகளை விரிவாக எடுத்துரைத்தார். மண்டல ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பி.என். ரிச்சர்டு ஜெகதீசன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியில் 25 பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர். நிகழ்ச்சி முடிவில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் (பொ.) மற்றும் பதிவாளர் அவர்கள், மைய வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டார்.

## பண்ணையாளர் கருத்தரங்கு



கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் “கறவை மாடுகளுக்குச் சிகிச்சையளிப்பதில் மரபுசாரா மூலிகை மருத்துவத்தின் பங்கு” குறித்த ஒரு நாள் பண்ணையாளர் கருத்தரங்கு 14.05.2014அன்று நடைபெற்றது. இதில் தஞ்சாவூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ந. புண்ணியமூர்த்தி அவர்கள் பங்கேற்று, தொழில்நுட்ப உரையாற்றிக் கால்நடைப் பண்ணையாளர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார். மொத்தம் 37 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.

## பட்டறிவுப் பயணம்

அரவக்குறிச்சி வட்டார ஆத்மா திட்டத்தின்கீழ் கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்மூலம் முன்னோடி விவசாயிகள் பயனடையும் வகையில் மேச்சேரி செம்மறியாடு ஆராய்ச்சி நிலையத்திற்கு 16.05.2014அன்று பட்டறிவுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது. இப்பயணத்தில் 25 கால்நடைப் பண்ணையாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி முகாம்

தேசிய உணவுப் பதப்படுத்துதல் திட்ட நிதியுதவியுடன் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி முகாம் 28.05.2014அன்று குன்றக்குடி, வேளாண் அறிவியல் நிலையத்தில் துவக்கிவைக்கப்பட்டது. இதனை நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம். பழனிசாமி அவர்கள் துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் சிவகங்கை, வேளாண் வணிகத்தின் துணை இயக்குநர் திரு. ஜி. சௌந்திரராஜன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

## கல்லூரி மாணவர்கள் தாய்லாந்துப் பயணம்

பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பயனாக, தாய்லாந்தைத் தலைமையிடமாகக் கொண்ட சரோன் போக்பந்த் பன்னாட்டுக் கோழியின நிறுவனம் ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் பி.டெக். மூன்றாமாண்டு மாணவர்கள் எஸ்.சி. பிரசன்னகுமார் மற்றும் ஏ. ஸ்ரீநாத் ஆகியோரைத் தமது நிறுவனத் தூதுவர்களாகத் தேர்வுசெய்தது. இம்மாணவர்கள் தாய்லாந்தில் உள்ள நிறுவனத்தின் கோழியினப் பதப்படுத்தல் நிலையம், குஞ்சுபொரிப்பகம் மற்றும் உற்பத்திப் பிரிவுகளை 28.05.2014 மற்றும் 02.06.2014ஆம் தேதிகளில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

Posted on 23.06.2014 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 21.06.2014

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/12-14
Registration No.TN/TBM/32/2012-14

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. D. Thyagarajan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Printing Press, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. D. Thyagarajan, M.V.Sc., Ph.D.,** **Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

## இளநிலை ஆராய்ச்சி உதவித்தொகை

2014–15ஆம் ஆண்டுக்கு நடைபெற்ற இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் இளநிலை ஆராய்ச்சி உதவித்தொகைக்கான போட்டி நுழைவுத் தேர்வில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 2008–2009ஆம் சேர்க்கைப் பிரிவைச் சார்ந்த 9 மாணவர்கள் தேர்ச்சி பெற்றனர்.

## பணி ஓய்வு

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறைப் பேராசிரியர் முனைவர் மக்பூல் அகமத் அவர்கள் 31.05.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 01.06.1954இல் பிறந்த இவர் 31 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநரகத்தின் நிர்வாக அலுவலர் திருமதி வி. சரளா அவர்கள் 31.05.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 18.05.1956இல் பிறந்த இவர் 33 ஆண்டு பணியாற்றியுள்ளார்.



ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கணக்கு அலுவலர் திரு. ஆர். குமரேசன் அவர்கள் 31.05.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 17.05.1956இல் பிறந்த இவர் 31 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை நுண்ணுயிரியியல் துறையின் தொழில்நுட்பர் (நிலை II) திரு. எல். சென்னான் அவர்கள் 31.05.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 30.05.1956இல் பிறந்த இவர் 37 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாகர்கோவில், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் உதவியாளர் (சிறப்பு நிலை) திருமதி சி. அன்னம்மாள் அவர்கள் 31.05.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 20.05.1956இல் பிறந்த இவர் 33 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் புள்ளியியல் மற்றும் கணினிப் பயன்பாட்டியல் துறையின் கள உதவியாளர் திரு. எல். ராஜமாணிக்கம் அவர்கள் 31.05.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 20.05.1956இல் பிறந்த இவர் 22 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் உயிர் பொறியியல் பிரிவின் குடிநீர்க்குழாய்ப் பணியாளர் திரு. எஸ். செல்வன் அவர்கள் 31.05.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 11.05.1956இல் பிறந்த இவர் 24ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் பொருளியல் துறையின் பணியாளர் (தேர்வு நிலை) திரு. பி. ஸ்ரீராமன் அவர்கள் 31.05.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 06.05.1954இல் பிறந்த இவர் 22 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறையின் உடனாள் திருமதி எஸ். பெலிசியா அவர்கள் 31.05.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 13.05.1956இல் பிறந்த இவர் 23 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



புதுக்கோட்டை, பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தின் அடிப்படைப் பணியாளர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் 31.05.2014அன்று பணி ஓய்வு பெற்றார். 03.05.1954இல் பிறந்த இவர் 21 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.

